மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (8-11-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2.34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

45. கேரள மாநிலம், கொல்லம், மாதா அமிர்தானந்தமயி மடம் 1-4-1995 முதல் 15-4-1995 வரையிலான காலங்களில் தமிழ்நாட்டில் சமய ஒழுக்க திட்டத்திற்காகப் பயன்படுத்திய வாகன எண்கள்.

(1) கே.எல்.-2ஏ-5859; (2) கே.எல். 2சி-1242; (3) கே.எல்-2ஏ-9900-க்குச் செலுத்தப்பட வேண்டிய வரிக்கு விலக்களிப்பது குறித்து உள் துறையின் 3-4-1995-ஆம் நாளிட்ட 784-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

46. இந்திய அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு மருந்து கிடங்குக்குச் சொந்தமான வாகன எண் டி.எம்.இசட் 2830-க்கு 1-7-1989 முதல் 31-12-1993 வரையிலான காலங்களுக்குச் செலுத்த வேண்டிய தண்டத் தீர்வையை குறைப்பது குறித்து, உள் (போக்குவரத்து-I)துறையின் 6-1-1995-ஆம் நாளிட்ட 26-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

47. கோயம்புத்தூர், திருவாளர்கள் அட்சயா டெக்டைல்ஸ் லிமிடெட் அவர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரியினை 17-2-1995 முதல் ஒரு ஆண்டுக்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-6-1995-ஆம் நாளிட்ட 158-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1995 நவம்பர் 7

48. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 17-6-1993-ஆம் நாளிட்ட 112-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

49. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு மேல்முறையீடு மற்றும் மறுஆய்வு விதிகளில் திருத்தம் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 16-8-1994-ஆம் நாளிட்ட 138-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

50. பதிவு எண் எம்.டி.எஸ். 5941 சரக்கு வண்டிக்கு 1-7-1986 முதல் 31-7-1986 வரையிலான காலங்களுக்குச் செலுத்த வேண்டிய வரி மற்றும் தண்டத் தீர்வையை குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 19-7-1995-ஆம் நாளிட்ட 726-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

51. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

52. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் இருபத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

53. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் ஆண்டறிக்கை [1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).